சுருக்கம்

வேளாண்மை – வேளாண்மைப் பொறியியல் துறையில் உழுவை வாடகைத் திட்டம் மற்றும் சிறுபாசனத் திட்டத்தில் இயக்கப்பட்டு வருகின்ற அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்கிடுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் 59 பணியிடங்களை 2017–18–ம் நிதியாண்டில் தொடருவதற்கு பணியிடத் தொடராணையும் அதற்காக நிதி ஒப்பளிப்பும் வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத் (வே.பொ.1) துறை

அரசாணை (டி) எண்.51 நாள்: 26.03.2018

திருவள்ளுவராண்டு 2049

பங்குனி திங்கள் 12–ஆம் நாள்

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.203, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 06.07.2016.
2. அரசு ஆணை (4டி) எண்.17, வேளாண்மை (வே.பொ.1)த் துறை, நாள் 28.04.2017.
3. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கடித எண்.ட்டி 1/020431/2015, நாள் 18.05.2017
4. அரசு கடித எண்.2107/வே.பொ.1/2017–2, நாள் 24.05.2017.
5. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கடித எண்.ட்டி 1/020431/2015, நாள் 27.07.2017, 29.12.2017
6. அரசுக் கடித எண்.169/வே.பொ1/2016–17 நாள் 14.11.2017

----

ஆணை:-

வேளாண்மைப் பொறியியல் துறையில் உழுவை வாடகைத் திட்டம் மற்றும் சிறுபாசனத் திட்டத்தில் இயக்கப்பட்டு வருகின்ற அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்கிடுவதற்கு 2007 முதல் 2012 வரை மொத்தம் 92 தொகுப்பூதிய பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் தற்பொழுது 59 பணியாளர்கள் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் 2012–2013, 2013–2014, 2014–2015, மற்றும் 2015–2016–ஆம் நிதியாண்டுகளில் தொகுப்பூதியத்துடன் பணியினை தொடருவதற்கு தொடராணை வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில், வேளாண்மைப் பொறியியல் துறையில் உழுவை வாடகைத் திட்டம் மற்றும் சிறுபாசனத் திட்டத்தில் இயக்கப்பட்டு வருகின்ற அதிக மதிப்புடைய கனரக

(த.பி.பா)

இயந்திரங்களை இயக்கிடுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட 59 பணியாளர்களின பணியிடங்களை 2016–2017–ஆம் நிதியாண்டில் தொடருவதற்கு பணியிடத் தொடராணையும், மேலும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தொகுப்பூதியப் பணியாளர்களுக்கு தொகுப்பூதியம் வழங்கிட ரூ.54.36 லட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கியும் மேலும் மேற்கண்ட 59 பணியாளர்களை தவிர, கூடுதலாக தொகுப்பூதிய பணியாளர்களை நியமனம் செய்வதற்கு அரசுக்கு தனியாக கருத்துரு அனுப்பவும் ஆணையிடப்பட்டது.

3. இதனைத்தொடர்ந்து, வேளாண்மைப் பொறியியல் துறையில் உழுவை வாடகைத் திட்டம் மற்றும் சிறுபாசனத் திட்டத்தில் இயக்கப்பட்டு வருகின்ற அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்கிடுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் பணியிடங்களை 2017–2018–ஆம் நிதியாண்டில் தொடருவதற்கு பணியிடத் தொடராணையும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தொகுப்பூதிய பணியாளர்களுக்கு தொகுப்பூதியம் ரூ.84.96 இலட்சம் நிதி ஒப்பளிப்பும் வழங்க தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) கோரியுள்ளார். மேலும், தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் தனது கருத்துருவில், வேளாண்மைப் பொறியியல் துறையின் கீழ் செயல்படும் உழுவை வாடகைத் திட்டம் மற்றும் சிறுபாசனத் திட்டத்தில் இயக்கப்பட்டு வருகின்ற அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்கிடுவதற்கு 59 பணியாளர்களுடன், கூடுதலாக தற்போது நிலவும் வேலையாள் பற்றாக்குறை, அதிக மதிப்புடைய புல்டோசர்கள், டிராக்டர்கள், சுழல் விசைத்துளைக் கருவிகள் போன்ற மற்ற கருவிகளை இயக்கிடும் பணியாளர்கள், தேவைப்படுகின்ற அளவுக்கு துறையில் இல்லாத நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், மேற்குறிப்பிட்டுள்ள வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ஆகியவற்றிற்கான தேவை விவசாயிகள் மத்தியில் அதிகம் இருப்பதால் அந்த தேவையினை எதிர்கொள்ள ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்டு காலியாக உள்ள 33 தொகுப்பூதிய பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள அனுமதியும், ஆக மொத்தம் 92 பணியாளர்களை 2017–18ம் நிதியாண்டில் தொடர்வதற்கு தொடராணையும், நிதி ஒப்பளிப்பும் அளிக்குமாறு தலைமைப்பொறியாளர் (வே.பொ) தனது பிரேரணையில் குறிப்பிட்டுள்ளார். மேலும், உழுவை வாடகைத் திட்டம் மற்றும் சிறுபாசனத்திட்டத்தில் ஈட்டிய வருமானம் குறித்தும் விவரங்களைத் தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில், வேளாண்மைப் பொறியியல் துறையில் உழுவை வாடகைத் திட்டம் மற்றும் சிறுபாசனத்திட்டத்தில் இயக்கப்பட்டு வருகின்ற அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்குவதற்கு கூடுதலாக தேவைப்படுகின்ற 33 தொகுப்பூதிய பணியாளர்களை பணியமர்த்திக்கொள்ள அனுமதி வழங்குமாறு கோரியிருந்த கருத்துருவிற்கு, உழுவை மற்றும் கதிர் அறுவடை இயந்திரம், நெல் நாற்று நடவு இயந்திரம் போன்ற இயந்திரங்களின் பயன்பாடு என்பது பருவகால பயன்பாடு மட்டுமே ஆகும் என்பதால் ஏற்கனவே 2016–2017–ஆம் நிதியாண்டில் பணியிடத்தொடராணை வழங்கப்பட்ட 59 பணியாளர்களே போதுமானதாகும் என மேலே 4ல் படிக்கப்பட்ட அரசு கடிதம் மூலமாக தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியாளர்) அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. இதற்கிடையே, மேலே 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில், வேளாண்மைப் பொறியியல் துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்ற இயக்கிகளுக்கு சீராக தொகுப்பூதியத்தினை மாதம் ரூ.8,000/–லிருந்து, மாதம் ரூ.12,000/– என உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ.7,000/– தொகுப்பூதியம் பெறுகின்ற இளநிலை உழுவை ஓட்டுநர் மற்றும் துடைப்பாளர்கள் மற்றும் உதவி துளைஞர்கள் ஆகியோருக்கும் பொருந்தும் என்பதால் இவர்களுக்கும் மாத தொகுப்பூதியம் ரூ.12,000/– வழங்கலாம் என மேலே 5ல் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(த.பி.பா)

6. மேலே 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில், தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள், வேளாண்மைப் பொறியியல் துறையின் கீழ் செயல்படும் உழுவை வாடகைத் திட்டம் மற்றும் சிறுபாசனத் திட்டத்தில், இயக்கப்பட்டு வருகின்ற அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்கிடுவதற்காக தொகுப்பூதிய ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு தற்போது பணிபுரியும் 59 பணியாளர்கள் விபரம் மற்றும் 2017–18–ஆம் ஆண்டில் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகுப்பூதியத் தொகை ஆகிய விவரங்களை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

| வ. எண் | தொகுப்பூதிய பணியாளர்களின் பதவியின் பெயர் | தற்போது பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | தொகுப்பூதியத் தொகை (மாதம் ஒன்றுக்கு) | இந்நாள்வரை தொகுப்பூதியத் தொகை வழங்கப் படுகின்ற விபரம் (ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2018 வரை) | மொத்தக் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | ஒப்பந்த அடிப்படை இயக்கி | 20 | 12,000 | 20X12X12,000 | 28,80,000 |
| 2 | முதுநிலை உழுவை ஒட்டுநர் மற்றும் துடைப்பாளர் | 14 | 12,000 | 14X12X12,000 | 20,16,000 |
| 3 | இளநிலை உழுவை ஒட்டுநர் மற்றும் துடைப்பாளர் | 13 | 12,000 | 13X12X12,000 | 18,72,000 |
| 4 | அ. துளைஞர் | 6 | 12,000 | 6X12X12,000 | 8,64,000 |
| | ஆ. உதவி துளைஞர் | 6 | 12,000 | 6X12X12,000 | 8,64,000 |
| | மொத்தம் | 59 | | | 84,96,000 |

7. மேலே, பத்தி 6–இல் உள்ள, தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று, பின்வரும் இனங்களுக்கு அரசு ஆணையிடுகிறது:

i. வேளாண்மைப் பொறியியல் துறையில் உழுவை வாடகைத் திட்டம் மற்றும் சிறுபாசனத் திட்டத்தில் இயக்கப்பட்டு வருகின்ற அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்கிடுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட 59 பணியாளர்களின் பணியிடங்களை 2017–18–ஆம் நிதியாண்டில் தொடருவதற்கு பணியிடத் தொடராணையும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 59 தொகுப்பூதிய பணியாளர்களுக்கு தொகுப்பூதியம் மாதம் ரூ.12,000/– என்ற அடிப்படையில் வழங்கிட ரூ.84,96,000/- (ரூபாய் எண்பத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரம் மட்டும்) (நிதி ஒதுக்கம் – ரூ.54,40,000/ + தேவைப்படும் கூடுதல் தொகை ரூ.30,56,000) நிதி ஒப்பளிப்பும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

ii. Time Motion Study - நேரம் மற்றும் பணிபுரியும் திறன் அளந்தறிதல் என்கின்ற அடிப்படையில் ஊரக வளர்ச்சித் துறையில் ஒரு பணியை எவ்வளவு நேரம் மேற்கொள்ள

வேண்டும் – அதற்கான செலவினம் யாது என NREGSல் மாதிரி அளவீடு செய்வதுபோல் ரூ.12,000/– என்கின்ற ஒப்பந்த ஊதிய அளவீடு எட்டப்பட்டுள்ளதா, இல்லையெனில் அவ்வாறு பயன்பாட்டிற்கேற்ப ஊதியம் வழங்க மாதிரி பரிசோதனை நடத்துமாறு தலைமைப் பொறியாளர் (வே.பொ.) அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8. மேலே பத்தி 7–ல் ஒப்பளிக்கப்பட்டச் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2401–00–பயிர் வளர்ப்பு – 113 வேளாண்மைப் பொறியியல் மாநிலச் செலவினங்கள் AC – டிராக்டரை வாடகைக்கு விடும் திட்டம் –33 தொழில் முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம் (துதொகு 2401–00–113– AC 3345)"

9) மேலே பத்தி 7ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

10. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அ.சா.கு.எண் 15641/நிதி (வேளாண்மை) / 2018, நாள் 26.03.2018இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

**ககன்தீப் சிங்பேடி**
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை –35.
மாநில முதன்மைக் கணக்காயர் (G&SSA), சென்னை –18.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&RSA), சென்னை –18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை –18. (பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-35.
ஆணையர், கருவூல கணக்கு அலுவலகம், சென்னை–15.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காயர் அலுவலகம்
(சமூகத்தணிக்கைப் பிரிவு) சென்னை–9.

<u>நகல்</u>

நிதி (வேளாண்மை /வரவு செலவு பொது .II) துறை, சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளரின்
தனிச்செயலர், வேளா ண்மைத் துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு.3) துறை, சென்னை–9 (பட்டியல் படுத்தும் வகைக்கு).
உதவி நிரலர், வேளாண்மைத் துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.